## ஜனவரி – 26 – சனி

### புனிதர்கள் திமோத்தேயு மற்றும் தீத்து
### “உலகெங்கும் வாழ்வோரே,ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள் (தி.பா:96:1)

**முதல் வாசகம் : (வாசகம் வேறுபடலாம்)**
**2 திமோத்தேயு 1 : 1 – 8**

என் அன்பார்ந்த பிள்ளை திமொத்தேயுவுக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து இயேசு அருளும் வாழ்வு பற்றிய வாக்குறுதிக்கு ஏற்ப அவருடைய திருத்தூதனான பவுல் எழுதுவது. தந்தையாம் கடவுளிடமிருந்தும் நம் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவிடமிருந்தும் அருளும் இரக்கமும் அமைதியும் உரித்தாகுக! என் முன்னோரைப் போன்று தூய்மையான மனச்சான்றுடன் கடவுளுக்குப் பணியாற்றும் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் என் மன்றாட்டுகளில் உன்னை நினைவுகூறுகின்றேன். உன் கண்ணீரை நினைவிற் கொண்டு உன்னைக் காண ஏங்குகிறேன் கண்டால் என் மகிழ்ச்சி நிறைவடையும். வெளிவேடமற்ற உன் நம்பிக்கையை நினைத்துப் பார்க்கிறேன். இத்தகைய நம்பிக்கை முதலில் உன் பாட்டி லோயி மற்றும் உன் தாய் யூனிக்கி ஆகியோரிடம் விளங்கியது. இப்போது உன்னிடமும் உள்ளதென உறுதியாக நம்புகிறேன். உன் மீது என் கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்தியபோது உனக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன். கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல, வல்லமையும் அன்பும் கட்டுபாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார். எனவே நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவை இல்லை கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள்.

**பதில்பாடல் :** பிற இனத்தாருக்கு ஆண்டவரின் மாட்சியை எடுத்துரையுங்கள்.

**நற்செய்தி : (வாசகம் வேறுபடலாம்)**
**மாற்கு 16 : 15 – 18**

அக்காலத்தில் இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்” என்று கூறினார்.

**தியானம்:** இன்று திருச்சபையானது புனித திமொத்தேயுவையும், புனிததீத்துவையும் நினைவு கூருகின்றது. இருவரும் புனித பவுலால் தெரிவு செய்யப்பட்டவர்கள். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக இறை அரசை மக்களிடம் எடுத்து சென்றவர்கள். பல துன்பங்களை சந்தித்தவர்கள். நாமும் இறை அரசை அறிவிக்க அழைக்கப் பட்டிருக்கின்றோம். பாக்கிஸ்தானில் முஸ்லிம் மதத்தை அவமதித்தார் என்ற காரணத்தால் ஒரு பெண்ணிற்கு மரணதண்டனை விதித்து அவரை சிறையில் அடைத்தார்கள். பல உலகநாடுகள் இதற்கு கண்டனம் தெரிவித்தநிலையில் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. அவரின் விடுதலைக்குஎதிராக நிறைய போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டதால் பாதுகாப்புக் கருதி அவர் இருக்கும் இடம் மறைக்கப் பட்டுள்ளது. கனடாவில் வாழ அவர் விண்ணப்பித்திருப்பதாகக் கூட செய்திகள் வந்தன. நாம் வாழும் நாடு எமக்கு எல்லாவிதமான சுதந்திரத்தை தந்திருக்கின்றது. அதனை நாம் எவ்வாறு பயன் படுத்துகின்றோம். இன்று இளம் வயது பிள்ளைகளிடம் போதை பழக்கம் அதிகரித்துள்ளது. ஆண் பெண் என்று எல்லோரும் இதற்கு அடிமையாகி வருகின்றார்கள். அண்மையில் ரொறன்ரோவில் இளம் வயது தமிழ் சட்டத்தரணி அதிக போதை ஏற்படுவதற்காக வலிமாத்திரை நிவாரணியை உட்கொண்டு மரணம் அடைந்ததாக பத்திரிகையில் செய்திவந்தது. எதைத்தேடி இவர்கள் ஓடுகின்றார்கள்? இது யாரின் தவறு? கடவுளா?, பெற்றோரா? பிள்ளைகளா? சிந்தித்துப் பார்க்கவேண்டும். அளவுக்கு மிஞ்சிய வசதியா, பணமா, அன்பு இல்லாமையா, தனிமையா இதற்குகாரணம். கட்டுப்பாடும், குடும்ப ஒன்று கூடலும் இன்று இல்லை. எல்லோரும் வாரத்தில் ஒருநாளாவது ஒன்றாக இருந்து உணவு அருந்த முடிகின்றதா? இறை அரசுப் பணி முதலில் குடும்பத்தில் இருந்துதான் ஆரம்பமாகவேண்டும். முடியுமா எம்மால்?